[2nd March 1968

மாண்புமிகு திரு. எம். முத்துசாமி : (அ), (இ) and ஒரு அறிக்கை * இம்மன்றத்தின் முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. என். ஆர். தியாகராஜன் : தலைவரவர்களே, மதுரை ஜில்லா, கொடைக்கானல் தாலூக்கா, பண்ணைக்காடு ஊரில் நீண்டநாட்களாக தேர்தல் நடத்தப்படாமல் இருக்கிறது. அங்கு தேர்தல் நடத்த என்ன ஏற்பாடு செய்திருக்கிறீர்கள் ? கிராம பஞ்சாயத்து, நகர பஞ்சாயத்து என்று இரண்டு பஞ்சாயத்துக்கள் இருக்கின்றன. அவைகளை ஒரு பஞ்சாயத்தாக ஆக்கப்பட இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. எம். முத்துசாமி : தலைவரவர்களே, தேர்தல் நடைபெறாததற்கான காரணங்களைப் பற்றிய விவரமில்லை. என்னென்ன இடங்களில் நடைபெறவில்லை என்பதைத்தான் சொன்னேன். பொதுவாகத் தேர்தல் நடைபெறாததற்குக் காரணம், முன்பு அவசர நிலை பிரகடனப் படுத்தப்பட்டிருந்ததால் தேர்தல்கள் ஒத்திவைக்கப்பட்டன. நிறைவு செய்யாமல் பல இடங்களில் பதவி இழப்பு, பதவி துறப்பு, உயிர் இழப்பு ஆகிய காரணங்களால் நிறைவு செய்யப்படாமல் இருக்கிறது. கொடைக்கானல் தாலூக்காவில் இருக்கக்கூடிய பண்ணைக்காடு என்ற ஊரில் ஊராட்சி மன்றம் அமைக்கிற முயற்சியில் அரசாங்கம் ஈடுபட்டு நடவடிக்கை எடுத்து வரப்படுகிறது. அது பற்றிய விவரங்கள் தனிக் கேள்வியின் மூலம் அறிவிக்கப்படும்.

Attack on Pavadai Padayachi

*160-A *Q.*—**Thiru N. R. THIAGARAJAN : Will The Hon. the Chief Minister be pleased to state—**

(*a*) whether in Kurinjipadi village, South Arcot district some persons entered into the house of one Pavadai Padayachi and attacked him ;

(*b*) whether he was attacked in the police station also ;

(*c*) whether he died on the way while being taken to the jail ; and

(*d*) if so, the action taken in the matter ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : (On behalf of the Hon. tqe Chief Minister) :

(அ) & (ஆ) இல்லை.

(இ) கடலூரிலுள்ள சப்-மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டுக்கு அழைத்துச் செல்லும்போது பாவாடைப் படையாச்சி காலமானார்.

(ஈ) சிதம்பரம் கோட்டாட்சித் தலைவர், பிரேத விசாரணை செய்து அதன் பின்னர் பிரேதப் பரிசோதனைக்கு அனுப்பி வைத்தார். நடந்த சம்பவம் பற்றி அவர், விரிவானதோர் விசாரணையும் நடத்தினார். பிரேதப் பரிசோதனையின் முடிவு அறிக்கை, புலன் விசாரணையில் கண்ட காரண காரியங்கள் இவைகளின் அடிப்படையில், பாவாடைப் படையாச்சி இயற்கையாகவே காலமானார் என்பதாக விசாரணை அதிகாரி முடிவு கூறியுள்ளார்.

திரு சி. பி. சிற்றரசு : தலைவரவர்களே, அந்த மாதிரி நடக்கிற சம்பவங்களுக்கு பஞ்சாயத்தார்கள் கூடி முடிவு செய்யப்பட வேண்டும். அப்படிச் செய்யப்பட்டதா ? அந்த பஞ்சாயத்தார்கள் யார் யார் என்பதை சொல்ல முடியுமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : 500 பேர்கள் கொண்ட கூட்டத்தில் அவர்கள் முன்னிலையில் பஞ்சாயத்துக்காரர்கள் இருந்து, குறிஞ்சிப்பாடி மணியக்காரர் தலைமையில் 5 பேர்கள் இருந்து அது பற்றி முடிவு செய்து

---

* Printed as Appendix IV on pages 270–127.

இருக்கிறார்கள். அவர்களின் முடிவு பாவாடைப் படையாச்சி அதிர்ச்சியினால் இயற்கையாகவே இறந்திருக்கிறார் என்பதாகும். வேறு எதுவும் இல்லை.

திரு. எம். எத்திராஜுலு : தலைவரவர்களே, பாவாடைப் படையாச்சி அந்த ஊரில் இருப்பவர். அவர் வீட்டின் உள்ளே சென்று தாக்கி, கையைப் பின்கட்டாகக் கட்டிப் போலீஸ் ஸ்டேஷனுக்கு அழைத்துச் சென்றதாகவும், அவரை அங்கே லாக்கப்பில் வைத்து மறுதினம் மாஜிஸ்ட்ரேட் முன்பு ஆஜர் செய்ய அழைத்து வரும்போது, எதிரில் உள்ள கோவிலின் முன்பாக அவர் "என்னை அநீதியாக போலீஸ்காரர்கள் இப்படி துன்புறுத்தி, வற்புறுத்தி அழைத்துச் செல்கிறார்கள் ; நீங்கள் தான் கேட்க வேண்டும், ஆண்டவன் தான் கேட்க வேண்டும்", என்று சொன்ன பிறகுதான், அந்த இடத்தில் உயிர் துறந்தார் என்று பத்திரிகையில் வந்திருக்கிறது. பொது மக்களும் அப்படியேதான் சொல்கிறார்கள். ஆகையால் தானாகவே இறந்திருக்கிறார் என்று சொல்வது எப்படி நியாயமாகும் ? ஆகவே இதைத் தனியான நீதிபதி அமைத்து விசாரிக்க அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : பத்திரிகையில் வந்தது அரசியல் வர்ணம் பூசப்பட்டு வந்த செய்தியாகும். உண்மையிலே நடைபெற்ற தகவல் பாவாடைப் படையாச்சி என்பவருக்கும், அவருடைய பங்காளி சீனிவாச படையாச்சி என்பவருக்கும் பந்தக் கால்நடுவதில் ஏற்பட்ட தகராறு. சீனிவாச படையாச்சி தன்னுடைய மகன் திருமணத்திற்காக பந்தக்கால் நடுவதற்கு ஒரு இடம் தேர்ந்தெடுத்தார். அந்த நிலம் தன்னுடையது என்று பாவாடைப் படையாச்சி தகராறு செய்தார். இருவர்களுக்கும் இதன் காரணமாக சண்டை வந்தது. சீனிவாச படையாச்சிக்கு உதவியாக வந்த குப்புசாமி படையாச்சியின் இடது தோளில் பாவாடை படையாச்சி குத்திவிட்டார். அதன் காரணமாக அவர் ஓடியபோது மக்கள் பின்னால் சென்று அவரைப் பிடித்து போலீஸில் ஒப்படைத்தார்கள். போலீஸ்காரர்கள் அவரை கோர்ட்டுக்கு அழைத்துச் செல்லும் நேரத்தில் பாவாடைப் படையாச்சி அதிர்ச்சியினால் மரணம் அடைந்தார். அவருக்கு வயது 60-க்கு மேல் இருக்கும் என்று சொல்லப்படுகிறது.

Police Uniform.

***160-B** *Q.*—THIRU N. R. THIAGARAJAN : **Will the Hon. the Chief Minister be pleased to state whether there is any proposal to change the uniform and the shape of the helmet of policemen in Tamilnad ?**

போலீஸாரின் உடுப்பு.

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

தமிழகப் போலீஸாரின் உடுப்பு, தொப்பி அமைப்பு ஆகியவைகளை மாற்றும் உத்தேசமுண்டா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி (on behalf of the Hon. the Chief Minister) : உடுப்பினை மாற்றும் உத்தேசம் இல்லை. தொப்பியைப் பொறுத்து மாறுதல் செய்வதை இந்த அரசு ஏற்றுக்கொண்டுள்ளது.

திரு. என். ஆர். தியாகராஜன் : தலைவரவர்களே, தொப்பியை எப்படி மாற்றப் போகிறார்கள் ? என்ன கலரில் இருக்கும் ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : கலர் ஒன்றும் நண்பர் தியாகராஜன் அவர்கள் பயப்படுவது போல் இருக்காது. இப்போது அவர்கள் "working dress" ஆக "பேரே கேப்" அணியவேண்டுமென்றும், "Ceremonial function" நேரங்களில் "பீக்—கேப்" அணிய வேண்டுமென்றும் ஐ.ஜி. அவர்கள் யோசனை கூறி அதற்கு ஏற்ப 24—2—1967-ல்